# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்

---

*[1990, மே மாதம் 08 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1990, மே மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 1.50** **தபாற் செலவு : ரூபா 1.55**

# 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்

[1990, மே மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ 46/89

பொருளாதாரத்தின் பல்வேறு துறையினருக்கும் அதிலும் குறிப்பாக விதிமுறைப்படாத துறையினருக்கும் கடன் விநியோகித்தலை இயலச் செய்யும் கருத்துடன் கடன் கொடுக்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவோர் தொடர்பிலான கடன் தகவலைச் சேகரிப்பதற்கும் பணியகத்தின் பங்குகாரர்களுக்கு அத்தகைய தகவலை ஏற்பாடு செய்வதற்குமாக இலங்கை கடன் தகவல் பணியகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதியும்.**

1. இச்சட்டமானது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### இலங்கை கடன் தகவல் பணியகத்தினைத் தாபித்தல்

**இலங்கை கடன் தகவல் பணியகத்தினைத் தாபித்தல்.**

2. பணியகத்தின் பங்குதாரர்களாகவுள்ள ஆட்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "பணியகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை கடன் தகவல் பணியகம்" என அழைக்கப்படவேண்டிய பணியகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

**பணியகம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பது.**

3. பணியகமானது 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறு வழியுரிமையும், பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

**பணியகத்தின் தலைமை அலுவலகம், கிளை அலுவலகங்கள் அத்துடன் முகவர்கள்.**

4. பணியகத்தின் தலைமை அலுவலகமானது கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது அவசியமானதெனக் கருதக்கூடியதாக, பணியகத்தினது அத்தகைய கிளை அலுவலகங்களும் முகவர்களும், கொழும்பு தவிர்ந்த இலங்கையில் உள்ள இடங்களில் தாபிக்கப்படலாம்.

**பணிப்பாளர்கள் சபை.**

5. (1) பணியகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்—

(i) சபையின் தவிசாளராகவிருக்க வேண்டியவரான, பணச்சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவரையும்;

(ii) பணச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மத்திய வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும்;

(iii) இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இலங்கை வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும் ;

(iv) மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மக்கள் வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவரையும் ;

(v) இலங்கை வங்கி, மக்கள் வங்கிகள் தவிர்ந்த, பங்குடைமை கொண்ட உரிமையளிக்கப்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள் இருவரையும் ;

(vi) பங்குடைமை கொண்ட நிதிக்கம்பெனிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் ஒருவரையும் ;

(vii) தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அத்துடன் அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பவற்றின் பணிப்பாளர்கள் சபையிலிருந்து நிதி எனும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவரையும் ;

(viii) பணியகத்தின் பொது முகாமையாளர் என்னும் பதவியை வகிக்கின்ற ஆளையும்

கொண்டுள்ள (இதனகத்துப் பின்னர் " சபை " எனக் குறிப்பிடுசெய்யப்படும்) பணிப்பாளர்கள் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பணியகத்தின் பணிப்பாளர்கள், பதவிக்காலம், அத்தகைய பணிப்பாளர்களுக்குச் செலுத்தற்பாலதான ஊதியம், கூட்டங்களுக்கு அத்துடன் பணியகத்தின் இலச்சினை என்பன தொடர்பில் பயனுடையனவாதல் வேண்டும்.

(3) சபையானது இச்சட்டத்தினால் பணியகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

**பணியகத்தின் பணிகள்.**

6. கடன் நிறுவனங்களின் கடன் பெறுவோர் மற்றும் உத்தேச கடன் பெறுவோர் மீதான வியாபார, கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவலைச் சேர்த்தலும் ஒன்றிணைத்தலும், அத்துடன் கடன் வழங்கும் நிறுவனங்களான, பணியகத்தின் பங்குதாரர்களுக்கு, வேண்டுகோளின்பேரில், பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும், குறிப்பாக, ஒழுங்குமுறை சாராத துறைக்கும் கடன் விநியோகத்துக்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் கடன் தகவல் கொடுத்துதவுதலும் பணியகத்தின் பணிகளாதல் வேண்டும்.

**பணியகத்தின் தத்துவங்களும் கடமைகளும்.**

7. பணியகமானது, அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், அத்துடன் புரியலாம் :—

(அ) கடன் நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவோர் மீது தரவு வங்கியொன்றைப் பேணுதல் ;

(ஆ) கடன் நிறுவனங்களின் கடன்பெறுவோர் அல்லது உத்தேச கடன் பெறுவோர் மீதான வியாபார, கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவலைச் சேகரித்தலும் ஒன்றிணைத்தலும்;

(இ) அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவலைக் களஞ்சியப்படுத்தல் ;

(ஈ) பணியகத்தின் பங்குதாரர்களுக்கு. வேண்டுகோளின் பேரிலும் நம்பிக்கையிலும் கடன் தகவலைக் கொடுத்துதவுதலும் அத்தகைய தகவலானது கொடுத்துதவப்பட வேண்டிய படிவங்களை விதிந்துரைத்தலும் ;

(உ) கடன் தகவலைக் கொடுத்துதவியமைக்காக அவசியமானதெனஅது கருதக்கூடிய அத்தகைய கட்டணங்களை அறவிடல் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் அத்துடன் வைத்திருத்தலும் அத்துடன் அத்தகைய ஆதனத்தைக் குத்தகைக்கு விடல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறுவிதமாகக் கையுதிர்த்தலும்;

(எ) ஏதேனும் வர்த்தக வங்கியில் நடப்புக் கணக்குகளையும் வைப்புக் கணக்குகளையும் திறத்தல் அல்லது மூடுதல்;

(ஏ) பொது முகாமையாளர் ஒருவரை நியமித்தல்—இவர் பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராயிருத்தல் வேண்டும்;

(ஐ) பணியகத்தின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாயிருக்கக் கூடிய அத்தகைய பிற அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்;

(ஒ) பணியகத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களுக்கு ஓய்வூதியம் அத்துடன் சகாய நிதியங்களைத் தாபித்தலும் சேமநல பொழுது போக்கு வசதிகளை, வீடுகளை, விடுதிச் சாலைகளை அத்துடன் இது போன்ற பிற தங்கு வசதிகளை ஏற்பாடுசெய்தலும்;

(ஓ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அத்துடன் சேவையாளர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல்;

(ஔ) பணியகத்தின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியத்தை வழங்குதல்;

(க) பணியகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமானதாயிருக்கக்கூடிய அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் செய்துகொள்ளுதல் அத்துடன் புரிதல்;

(ங) பணியக அலுவல்களின் நிர்வாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ச) பணியக அலுவல்களை முறையாகக் கொண்டுநடாத்துவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமானவையாயிருக்கக்கூடிய அத்தகைய மற்ற எல்லாக்காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

முகவர்கள்

8. இலங்கையின் ஏதேனும் இடத்தில் பணியகத்தின் முகவர்களைப் பணிப்பாளர்சபை நியமிக்கலாம்.

## பாகம் II

### நிதி

பணியகத்தின் மூலதனம்.

9. (1) பணியகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் நூறு ரூபாய்கொண்ட பத்து இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டு பத்துக்கோடி ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் வழங்கப்பட்ட மூலதனம் சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.

பணியகத்தின் பங்குகள்.

10. (1) பணச்சபையை அல்லது கடன்வழங்கு நிறுவனம் ஒன்றைத் தவிர வேறு ஆளெவரும் பணியகத்தில் பங்குகளைக் கொள்வனவு செய்ய உரித்துடையவராகார்.

(2) பணச்சபையானது, பணியகப் பங்குகளின் ஆரம்ப விநியோகத்திற்கான விண்ணப்பங்களைக் கோரிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டதன் பேரில் பணச்சபைக்கும் அத்துடன் கடன்வழங்கு நிறுவனங்களுக்கும் பின்வரும் விகிதாசாரத்தில் பங்குகளைப் பிரித்தொதுக்குதலும் வேண்டும்:—

பணச்சபை— வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் ஐம்பத்தொரு சதவீதம்;

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்— வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் முப்பது சதவீதம்; அத்துடன்

பிறகடன் நிறுவனங்கள்— வழங்கப்பட்ட அத்தகைய பங்கு மூலதனத்தில் பத்தொன்பது சதவீதம்

(3) பங்குகளின் ஆரம்ப விநியோகத்தின் பின்னர், பணச்சபையின் எழுத்து மூலமான அங்கீகாரத்துடனல்லாமல், பணியகத்தின் பங்குகளைப் பிரித்தொதுக்குவதோ அல்லது மாற்றுவதோ கூடாது.

(4) உட்பிரிவு (3) இன்கீழ் பங்குகளைப் பிரித்தொதுக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு அங்கீகாரமளிக்கும்போது, பணச்சபையானது உட்பிரிவு (2) இல் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள விகிதாசாரங்கள் பணியகத்தின் பங்குக்கொள்வனவில் பேணப்படுகின்றன என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு முயலவேண்டும்.

பங்குதாரர்களின் பொறுப்பு.

11. எவரேனும் பங்குதாரரின் பொறுப்பு அவரின் பங்குகளின் மேல் கொடுபடாமலிருக்கும் தொகை ஏதேனும் இருப்பின் அதற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

12. (1) பணியகமானது, காலத்திற்குக் காலம், ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிகளுக்கு பணச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அதன் மீதான வட்டியும் அதன் மீள்செலுத்துகையும் பற்றிய அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைவாக, மத்திய வங்கியிலிருந்து பணத் தொகைகளைக் கடன் பெறலாம். பணியகத்தின் கடன் பெறுதல்கள்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பணியகத்தின் கூட்டுமொத்த கடன் பெறுதல்கள் எச்சந்தர்ப்பத்திலேனும் பணியகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்திற்குச் சமனான ஒரு தொகையை விஞ்சக்கூடாது.

13. பணியகத்தின் பணிகளை வினைத்திறமையுடன் நிறைவேற்றுவதற்கு, பொருளாதாரத்தின் விதிமுறைப்படாத்துறையுடன் தொடர்புடைய கருமங்களைக் கையாளுவதற்கான ஒரு பகுதி உட்பட அவசியமானவையாயிருக்கக்கூடிய அத்தகைய பகுதிகளைச் சபை தாபிக்கலாம். பணியகத்தின் பணிகள்.

14. (1) (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியமொன்றைப் பணியகம் கொண்டிருத்தல் வேண்டும். பணியகத்தின் நிதியம்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) அதன் மூலதனத்திற்கு ஒப்பப்பணமாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) பணியகத்தால் செய்யப்பட்ட முதலீடுகளின் பேரில் இலாபமாகப் பணியகத்தால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) பணியகத்தால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அதனால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) பணியகம் அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்து மூலமான ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் பணியகத்தின் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகித்தலில், புரிதலில் அத்துடன் நிறைவேற்றுதலில் அதனால் உறப்படும் ஏதேனும் செலவுகளைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தால் நிதியத்திலிருந்து கொடுபடுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறு அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

15. பணியகத்தைச் சார்ந்த எவையேனும் பணங்கள் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் முதலீடு செய்யப்படலாம். பணியகத்தின் பணத்தை முதலீடு செய்தல்.

16. (1) சபையானது, பணியாட்டொகுதியினரின் சேமநலத்துக்காக பொது ஒதுக்கு நிதியத்தைத் தாபித்தல் வேண்டும். இதற்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பணியகத்தின் தேறிய இலாபங்களிலிருந்து இத்தகைய பணத்தொகைகள் கைமாற்றப்படுதல் வேண்டும். ஒதுக்குகள்.

(2) பணியாட்டொகுதியினரின் சேமநலத்துக்காக ஒதுக்கு நிதியம், பணியகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் பயிற்சி, வீடமைப்பு மற்றும் சேமநல வசதிகளை வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கு நிதியங்களை தாபித்தல் வேண்டும்.

பணியகத்தின் நிதி ஆண்டு கணக்காய்வு.

17. பணியகத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

18. (1) கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பன்னிரண்டு மாத காலமொன்றை பொருட்படுத்தாது அத்தகைய கால இடைவெளிகளுக்குள் பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமை அதிபதி பணியகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு தகைமைபெற்ற கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர், பணியகம் தொடர்பில் கணக்காய்வாளரின் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவருடைய அல்லது அவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்துவதற்குத் தாம் உத்தேசித்துள்ளார் என அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களுக்கு அறிவித்தலும் வேண்டும். அத்துடன் அதன் மீது அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ் செயலாற்றுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு தகைமைபெற்ற கணக்காய்வாளரும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர், பணியகத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்து—

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவலையும் விளக்கவுரைகளையும் தாம் பெற்றாரா அல்லரா எனவும், அத்துடன்

(ஆ) அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகை அவரது அபிப்பிராயத்தில், பணியகத்தின் புத்தகங்களில் காட்டப்பட்டவாறாக அல்லது தகவலுக்கு எட்டியவரையிலும் அவருக்குக் கொடுக்கப்பட்ட விளக்கவுரைகளுக்கிணங்கவும் பணியகத்தின் அலுவல்கள் பற்றிய உண்மையானதும் செம்மையானதுமான நோக்கை வெளிக்காட்டுவதற்கு முறையாகத் தயாரிக்கப்பட்டனவா எனவும்,

ஐந்தொகைகளினதும் அறிக்கைகளினதும் செம்மையை நிச்சயித்துப் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஐந்தொகையின் செம்மையை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் பணியகத்தின் தலைமையலுவலகத்துக்கு அனுப்பப்பட்டனவும் பணிப்பாளர்கள் சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பணியகத்தின் அலுவலரினால் செம்மையானவை என அத்தாட்சிப்படுத்தப்பட்டனவுமான பணியகத்தின் ஏதேனும் கிளையின் புத்தகங்களிலிருந்தான எவையேனும் பிரதிகளை அல்லது பொழிப்புகளை அத்தகைய கிளை தொடர்பில் ஏற்றுக்கொள்ளலாம்.

(6) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து கணக்காளராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவரான ஒரு தனியாள் என்று பொருளாகும் ; அல்லது

(ஆ) அதன் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும், இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து கணக்காளராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கணக்காளர் குழுமம் எனப் பொருள்படும்.

19. (1) பணிப்பாளர்கள் சபையானது ஏதேனும் ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அமைச்சருக்கும் எல்லாப் பங்குதாரர்களுக்கும் அந்த ஆண்டு தொடர்பான பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதி ஒன்றை அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும் :— அமைச்சருக்கு அனுப்பப்படும் ஆவணங்கள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல்.

(அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ;

(ஆ) ஐந்தொகை ;

(இ) இலாப, நட்டக் கணக்கு ;

(ஈ) பணியகத்தின் வேலை பற்றிய கணக்கொன்றைக் கொடுக்கும் அத்தகைய சபைத் தவிசாளரின் அறிக்கை.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

## பாகம் III

### பொதுவானவை

**சபையின் தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகளைக் கையளித்தல்.**

20. (1) சபையானது இச்சட்டத்தின்கீழ் பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு அதன் எவையேனும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கையளிக்கலாம்.

(2) எந்த அலுவலருக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலர், சபையினால் அவருக்குக் கொடுக்கப்பட்டதான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணியைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எது எப்படியிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்டனவான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்

**விவரத் திரட்டுக்களும் தகவலும்.**

21. (1) பணியகம் அல்லது பணியகத்தினால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்துமூலமான அறிவித்தல்மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய கடன் வழங்கு நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுநர்கள் தொடர்பில் அத்தகைய எல்லா விவரத்திரட்டுக்களையும் தகவலையும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய காலத்துக்குள் பணியகத்துக்கு அல்லது பணியகத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு கொடுத்துதவுமாறு ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்.

(2) அத்தகைய கடன் நிறுவனத்தைத் தாபிக்கின்ற ஏதேனும் சட்டத்திற்கு அல்லது வேறு சட்டத்தில் அல்லது அத்தகைய கடன்வழங்கு நிறுவனத்திற்கும் அத்தகைய கடன்வழங்கு நிறுவனத்திலிருந்து மற்றும் கடன்பெறுநருக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கு முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலினால் ஏதேனும் விவரத்திரட்டு அல்லது தகவலைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாது (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல் எதுவும், பங்காளரின் வேண்டுகோளின்பேரில், பணியகத்தின் ஒரு பங்குதாரரான கடன்வழங்கு நிறுவனமொன்றுக்குத் தவிர அல்லது பணியகத்தின் பணிகளை நிறைவேற்றும் போது தவிர எவரேனும் ஆளுக்குப் பணியகத்தினால் வெளியிடப்படுதல் அல்லது தெரியப்படுத்தப்படல் ஆகாது.

**மறுப்பதற்கான உரிமை.**

22. (1) பணியகத்தின் பணிப்பாளர், அல்லது வேறு அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் சட்டத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும்போது தவிர இச்சட்டத்தின்கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தக

வலை வெளியிடுதல் அல்லது இச்சட்டத்தின் கீழ் பணியகத்திற்கு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டு அல்லது வேறு தகவலை ஏதேனும் நீதிமன்றம் அல்லது வேறு நிறுவனத்தின் முன்வைத்தல் ஆகாது.

(2) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அல்லது ஏதேனும் சட்டத்தால் அவ்வாறு தேவைப்பட்டபோது தவிர, இச்சட்டத்தின் கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை வெளிப்படுத்துதலோ அல்லது இச்சட்டத்தின் கீழ் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது வேறு ஏதேனும் தகவலை ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னிலையில் முன்வைத்தலோ ஆகாது.

23. (1) பணியகத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அவரது கடமைகளை ஏற்குமுன் பணியகத்தின் அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கருமங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைக் கடுமையாகத் தாம் பேணுவார் என்ற ஒரு வெளிப்படுத்துகையில் ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைமூலம், — இரகசியத்தை வெளிப்படுத்தல்.

(அ) சட்ட நீதிமன்றமொன்றினால் அல்லது அத்தகைய கருமங்கள் எந்த ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் தொடர்புடையதாக உள்ளதோ அந்த எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் குழுவினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டாலன்றி அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அன்றி,

அவரின் கடமைகளையும், பணிகளையும் புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் அவரின் அறிவுக்கு வரக்கூடிய எவையேனும் கருமங்களை வெளிப்படுத்துவதில்லையெனத் தம்மை அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் பிணித்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், அலுவலர், அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் பணியகத்திடம் இருந்து அத்தகைய கடன் வழங்கு நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அல்லது நிதிசார்ந்த தகவல் தொடர்பிலும், அது தொடர்பிலான எல்லா கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைப் பேணுவதாகத் தம்மைப் பிணையம் வைத்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம்.

(அ) அவ்வாறு

(i) நீதிமன்றமொன்றினால்;

(ii) அத்தகைய தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ அந்த ஆளினால்

தேவைப்படுத்தப்பட்டபோது;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகத் தவிர அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது விடயத்தை வெளிப்படுத்துவதில்லையெனத் தம்மைப் பிணையமாக்குதல் வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணித்தலின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.**

24. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயலுக்காகப் பணியகத்திற்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக பணியகத்தின் எவரேனும் பணிப்பாளருக்கு, அலுவலருக்கு சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக

தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் பணியகத்தினால் அல்லது பணியகத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பணியகத்தினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பணியகத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது பணியகத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், அத்தகைய ஆளினால் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலன்றி, அவருக்கு நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**பணியகத்தின் பணிப்பாளருக்கு அல்லது அவரது ஆதனத்துக்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படாமை.**

25. பணியகத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் எவரேனும் பணிப்பாளருக்கு எதிராக அல்லது அவரது ஆதனத்துக்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படல் ஆகாது.

**விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.**

26. (1) சபையானது, எவ்விதிகள் இச்சட்டத்தினால் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு அல்லது தேவைப்படுத்தப்பட்டு உள்ளதோ அவ்விதிகள் தொடர்பிலான எல்லா அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் அது அமைச்சரால் அங்கீகாரமளிக்கப்பட்டு அத்துடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

**குற்றங்களும் தண்டனைகளும்.**

27. (1) (அ) இருபத்தோராம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டில் அல்லது தகவலில் பிழையான அல்லது பொய்யான ஏதேனும் கூற்றை அறிந்துகொண்டு அளிக்கின்ற;

(ஆ) இருபத்தோராம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாட்டுடன் நியாயமான காரணமில்லாது இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற ;

(ஈ) பணியகத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளராக இருந்து கொண்டு இச்சட்டத்தினால் எந் நோக்கத்துக்காக ஏதேனும் தகவலை வெளிப்படுத்த அதிகாரமளிக்கப்பட்டதோ அந்நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்துக்காக, எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது அது தொடர்புடையதான அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை வெளிப்படுத்துகின்ற ;

(உ) பணியகத்தின் ஒரு பங்குதாரரான ஏதேனும் கடன் வழங்கு நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, பணியகத்திடமிருந்து அத்தகைய கடன் வழங்கு நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கடன் அல்லது நிதி சார்ந்த தகவலை இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தகவலை எந்த நோக்கத்திற்காக வெளிப்படுத்துவதற்கு அவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நோக்கமல்லாத ஏதேனும் நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துகின்ற

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் ஆள் ஒவ்வொருவரும் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டு காலப்பகுதியை விஞ்சாத ஒரு காலத்திற்கு மறியற்தண்டனைகளுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் செய்யப்பட்டிருக்குமிடத்து அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும் ;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின் அந்தக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ;

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் அவரது அறிவுக் கெட்டாது அத்தகைய தவறு புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தவிர்ப்பதற்கு அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பயன்படுத்தினர் என எண்பிப்பாராயின் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

(4) சபையானது 27 (1) (அ) அல்லது (ஆ) என்னும் பிரிவின் கீழ் தவறொன்றின் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகைக்கு கொண்ட அத்தகைய தவறை இணக்கலாம். இப்பிரிவின் கீழ் தவறொன்றின் இணக்கத்துக்காக சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிலையத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.**

28. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"இலங்கை வங்கி" என்பது (394 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி எனப் பொருள்படும்.

"மத்திய வங்கி" என்பது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியெனப் பொருள்படும் ;

"இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" என்பது, (165 ஆம் அத்தியாயமான) அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும் ;

"நிதிக் கம்பெனி" என்பது, நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்று எனப் பொருள்படும் ;

'உரிமம் பெற்ற வர்த்தக வங்கி' என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி என்று பொருள்படும்.

" கடன்வழங்கும் நிறுவனம் " என்பது—

(அ) உரிமம்பெற்ற ஒரு வர்த்தக வங்கி ;

(ஆ) ஒரு நிதிக் கம்பெனி ;

(இ) தேசிய சேமிப்பு வங்கி

(ஈ) இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி ;

(உ) அரச ஈட்டு முதலீட்டு வங்கி ;

(ஊ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ;

(எ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் போதியளவு நிதிவள உறுதி நிலையுடையதும் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்குக் குறிப்பாக ஒழுங்குமுறை சாராத துறைக்கும் கடன் விநியோக வசதியளிக்கும் நோக்கத்திற்காக அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் வெளிப்படுத்தப்பட்டதுமான கம்பனியொன்று.

என்று பொருள்படும் ;

" பணச் சபை " என்பது, பணச்சட்டத்தின் " 8 ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச் சபை எனப் பொருள்படும் "

" இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி " என்பது 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியெனப் பொருள் படும் ;

" தேசிய சேமிப்பு வங்கி " என்பது, 1971 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேசிய வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருள்படும்.

" மக்கள் வங்கி " என்பது 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியெனப் பொருள்படும்.

" அரசஈட்டு, முதலீட்டு வங்கி " என்பது, 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரசஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி எனப் பொருள்படும்.

## அட்டவணை

### பணிப்பாளர்கள் சபை தொடர்பிலான ஏற்பாடுகள்

1. தவிசாளரும் அத்துடன் 5(1) (viii) ஆம் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள பணிப்பாளரும் தவிர்ந்த, ஒவ்வொரு பணிப்பாளரும் தமது பதவியை, இறப்பு மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்றவாறு, மீளப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

ஆயின், இறப்பு மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கிய பணிப்பாளர் ஒருவரின் இடத்துக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படும் அல்லது தெரிவுசெய்யப்படும் பணிப்பாளர் ஒருவர், எப்பணிப்பாளரை அடுத்து அவர் வருகின்றாரோ, அப்பணிப்பாளரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

2. சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகப் பணிப்பாளர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது, தமது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதிருந்தால், அவரின் இடத்தில் பதிற் கடமையாற்றவென வேறு ஆள் பெயர் குறித்து நியமிக்கப் படலாம் அல்லது தெரிவு செய்யப்படலாம்.

3. பணிப்பாளர் ஒருவர், அதற்கான காரணம் எதுவும் காட்டப்படாமல் அவரைப் பெயர் குறித்து நியமிக்கின்ற அல்லது தெரிவு செய்கின்ற ஆளினால் அல்லது ஆட்களினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

4. (தவிசாளரும், அத்துடன் 5 (1) (viii) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பணிப்பாளரும் தவிர்ந்த) பணிப்பாளர் ஒருவர், தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது, அக் கடிதம் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

5. பணிப்பாளர்களுக்கு, சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியமும் அத்துடன் வேறு கொடுப்பனவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

6. (1) சபையின் தவிசாளர், சமுகமாயிருந்தால், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தாராதிருந்தால், சமுகமாயிருக்கும் பணிப்பாளர்கள், தமக்குள்ளிருந்து தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) சபையானது, இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாவது, அத்துடன், அவசியமானபோது அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் நான்கு பணிப்பாளர்களாதல் வேண்டும். அத்துடன், சபையானது, கூட்ட நடப்பெண் அத்துடன் இவ்வட்டவணையின் ஏற்பாடுகள் என்பன தொடர்பிலான தேவைப்பாட்டுக்கு அமைய, சபையின் கூட்டங்களும் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படும் நடவடிக்கை முறையையும் விதிகள் மூலம் ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவு செய்வதற்கான எல்லா வினாக்களும், சமுகமாயிருக்கும் பணிப்பாளர்களின் பெரும்பான்மை வாக்கினால் முடிவு செய்யப்படல் வேண்டும். வாக்குகள் சமனாய் இருக்கும் பட்சத்தில், தலைமை வகிக்கும் பணிப்பாளருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

7. சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதனையும், பணிப்பாளர்களுள் வெற்றிடமொன்று இருப்பதனால் அல்லது அத்தகைய எவரேனும் பணிப்பாளரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதனால் மாத்திரம் செல்லுபடியற்றதாக்கலாகாது.

8. (1) பணியகத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்பட்டு உருவமைக்கப்படுதல் வேண்டும், அத்துடன் சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(2) பணியகத்தின் இலச்சினையானது, தவிசாளரின் கட்டுக் காவலில் இருத்தல் வேண்டும்.

(3) பணியகத்தின் இலச்சினையானது, சபையின் அங்கோரத்துடன் அன்றியும் தவிசாளரினதும் அத்துடன் இரு பணிப்பாளர்களினதும் சமூகத்திலும் தவிர ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாகச் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

9. (அ) தவிசாளர், பணச் சபைக்கு முகவரியிடப்படும் கடிதம் ஒன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, பணச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(ஆ) பணச்சபையானது தவிசாளரை எந்நேரத்திலும் பதவியிலிருந்து அகற்றலாம்.

10. பணியகத்தினால் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர், சபையின் கூட்டமொன்றில் அத்தகைய அக்கறையின் தன்மை பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன், அத்தகைய பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் மீதான கலந்தாராய்வு அல்லது முடிவு எதிலும் பங்கு பற்றுதல் ஆகாதென்பதுடன், அத்தகைய கூட்டத்தில் அத்தகைய கலந்தாராய்வு நடந்து கொண்டிருக்கும்போது அல்லது அத்தகைய ஒப்பந்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அத்தகைய கூட்டத்திலிருந்து விலகுதலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177; (வெளிநாடு) ரூபா 236; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.